**செ. கு. எண்: 068** **நாள்: 06.05.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**</u>
<u>அவர்களின் அறிக்கை – 6.5.2018</u>

கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் வட்டம், பசூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கோபால் என்பவரின் மனைவி திருமதி பார்வதி என்பவர் அறுந்து கிடந்த மின்சாரக் கம்பியை தொட்டபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், திருக்கானூர்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. தாமோதரன் என்பவரின் மகன் திரு. மணிகண்டன் என்பவர் மின்கம்பத்தை பழுது பார்த்துக்கொண்டிருந்தபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கரைசுத்துப்புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பட்டுகுமார் என்பவரின் மகன் செல்வன் வருண் என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்தபோது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், உதகை மேல்கோடப்பமந்து இடத்தைச் சேர்ந்த திரு. துரைராஜ் என்பவரின் மகன் திரு. பாபு என்பவர் கொடிகம்பத்தினை தொட்டபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், மேலநீலித நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. (லேட்) பொன்னு பாண்டி என்பவரின் மனைவி திருமதி மாடத்தியம்மாள் என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததால் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், மானூர் வட்டம், நாஞ்சான்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. யோவான் என்பவரின் மகன் திரு. தேவராஜ் என்பவர் தெருவிளக்கை மாட்டிக்கொண்டிருக்கும்போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், இனுங்கூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. (லேட்) ஏகாம்பரம் என்பவரின் மகன் திரு. சரவணன் என்பவர் தெருவிளக்கை மாற்ற முற்படும்போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், அமைந்தகரை வட்டம், கோயம்பேடு பகுதியைச் சேர்ந்த திரு. கணபதி (லேட்) என்பவரின் மனைவி திருமதி மஞ்சுளா என்பவர் மின்மோட்டாரை இயக்கியபோது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், உத்தனப்பள்ளி உள்வட்டம், துப்புகானப்பள்ளி தரப்பு–கனஜூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. லோகப்பா என்பவரின் மகன் திரு. பெரியராமப்பா என்பவர் தோட்டத்தில் புல் அறுத்துக்கொண்டிருந்தபோது, மின்சார கம்பியை தவறுதலாக தொட்டதில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம், YMCA குப்பம் 5–வது தெருவைச் சேர்ந்த திரு. குமார் என்பவரின் மகன் திரு. விமல் குமார் என்பவர் மோட்டார் சுவிட்சை போட்டபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், தேனி வட்டம், ஊஞ்சாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. பிச்சை என்பவரின் மகன் திரு. லட்சுமணன் என்பவர் மின்கம்பத்தை பழுது பார்த்துக்கொண்டிருந்தபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட பல்வேறு நிகழ்வுகளில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மேற்கண்ட **11** நபர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**